

# TIST

January 2006

**TIST Wishes you all a Happy & Prosperous New Year and Happy Pongal**

## CHEZHUMAI ©

### Perumal Small Group of Marudham

Perumal is one of the oldest Small Group of TIST in Tamil Nadu. The members of this Small Group are carrying out the 'Best Practices' of TIST at Marudham. Their Node meeting is connected with Chittoor Node.

During end 2003, the members of this Small Group started a huge nursery with more than 70,000 casuarina seedlings. Two years after transplanting those seedlings, now the trees are standing more than 10 feet in height. They have also trimmed the side branches of trees, which gave them considerable amount to meet their day-to-day expenses.



TIST
The International Small Group & Tree Planting Program

**உங்கள் அனைவருக்கும் டிஐஎஸ்டியின் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள**

## செழுமை ©

### பெருமாள் சிறு குழு – மருதம்

பெருமாள் சிறு குழு தமிழ்நாட்டிலுள்ள டிஐஎஸ்டியின் பழமையான சிறு குழுக்களுள் ஒன்றாகும். இந்த குழுவின் அங்கத்தினர் மருதத்தில் டிஐஎஸ்டியின் சிறந்த பயிற்சிகளை நடைமுறைப்படுத்தி கொண்டிருக்கிறார்கள். அவர்களின் நோடு கூட்டம் சித்தூர் நோடு கூட்டத்துடன் தொடர்புடையது.

2003 ம் ஆண்டின் இறுதியில் இந்த அங்கத்தினர் 70,000 சவுக்கு நாற்றுகளை வைத்து ஒரு பெரிய அளவிலான நர்சரி தொடங்கினார்கள். இந்த நாற்றுகளை இடம் பெயர்த்து பயிரிட்டனர். இரண்டு வருடங்களுக்கு பின்னர் இப்பொழுது இந்த மரங்கள் 10 அடி உயரத்தில் வளர்ந்துள்ளது. மரங்களின் இரு பக்கங்களிலும் வளர்ந்த கிளைகளை கத்தரித்து விற்றதில் இவர்களின் அன்றாட செலவுகளை ஈடுசெய்ய தேவையான அளவு வருமானம் கிடைத்தது.

TIST
**TIST India** : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai 600061
Ph. 22246844 / 9840299822 E-Mail prabakar@tist.org Web: www.tist.org
**TIST USA** : Phone : 001 9188511917 Email : rameshn@tist.com

Due to the trimming of the side branches the trees have gained good vertical growth. This Small Group got their first voucher payment only during November 2005, i.e., after more than two years. The main reasons for such a delay are: a) They never attended the node meetings regularly and SGMR submission was very poor, b) They did not have non-relative members in their group, c) They were practicing monoculture, having just casuarinas trees instead of having multiple species. Though the members of this Small Group lost interest with TIST for the delay in voucher payment, but still TIST did not go away from them. TIST continuously followed them and made them perform the basic requirements of TIST and also TIST gave an adhoc amount of Rs.27,000/- as an advance during one of their members marriage. Last month this Small Group received Rs.1,83,733/- from TIST as their first voucher payment. This huge amount is the total voucher for their two years efforts. Immediately after receiving their voucher payment, they returned Rs.27,000/- to TIST which they received as an advance. This Small Group has also signed the GHG contract with TIST.

Perumal Small Group / பெருமாள் சிறு குழு



இருபக்க கிளைகளை கத்தரித்ததால் மரங்கள் நன்றாக உயர வளர்ந்தது. இந்த சிறு குழுவினர் தங்களின் முதல் வவுச்சர் பேமென்ட்டை நவம்பர் 2005ல் பெற்று கொண்டனர் (அதாவது இரு வருடத்திற்கு பின்) இந்த கால தாமதத்திற்கான காரணங்கள் : a. இவர்கள் வழக்கமாக நடக்கும் நோடு கூட்டங்களில் பங்கெடுப்பதில்லை. மற்றும் SGMR (எஸ்ஜிஎம்ஆர்) சமர்ப்பிப்பதில் கவனம் செலுத்தியதில்லை. b. இவர்களின் குழுவில் உறவினர் அல்லாத வெளியாட்கள் அங்கத்தினராக இல்லை. c. இவர்கள் ஓர் இன தோப்புகளையே கொண்டிருந்தனர். பல இன மரங்கள் வளர்பதற்கு பதிலாக சவுக்கு மரங்கள் மட்டுமே பயிரிட்டனர். இவர்களுக்கு வவுச்சர் பேமென்ட் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டதால் டிஐஎஸ்டியில் தங்களுக்கு இருந்த ஆர்வம் முற்றிலும் மறைந்தது. ஆனால் டிஐஎஸ்டி அவர்களிடமிருந்து விலகி செல்லவில்லை. மாறாக தொடர்ந்து அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து டிஐஎஸ்டியின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் அளவிற்கு அவர்களுக்கு உதவி கரம் நீட்டியது. மேலும் அங்கத்தினரின் திருமணத்தின் சமயம் குறித்து காரியத்திற்காக அனைக்கப்பட்ட ஆட்ஹாக் என்னும் தொகையாக 27,000 ரூபாயை முன்பணமாக தந்து உதவியது. சென்ற மாதம் இக்குழுவினர் டிஐஎஸ்டியிடமிருந்து முதல் வவுச்சர் பேமெண்டாக ரூபாய் 1,83,733 பெற்றுக்கொண்டனர். இந்த பெருந்தொகை இவர்களின் இருவருட முயற்சிக்கான மொத்த வருவாயாகும். வவுச்சர் பேமென்ட் பெற்று கொண்டவுடன் அவர்கள் முன்பணமாக பெற்ற 27,000 ரூபாயை டிஐஎஸ்டிக்கு திருப்பி செலுத்தினர். இவர்கள் GHG (ஜிஎச்ஜி) ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டனர்.

## Small Group – GHG Signing

We have informed through previous Chezhumai about the importance of GHG contract. In short, once again we explain the importance of GHG contract - By signing the GHG contract, a Small Group gives the rights to TIST to sell their carbon credits, that's it, nothing more. TIST requests the Small Groups to give the rights to sell their carbon credits and follow the 'Best Practices' of TIST regularly. Without this rights (GHG) from the Small Groups, TIST will not be able to sell the carbon credits, in other words, TIST will not be able to fund for the voucher payment to the Small Groups without the sale of the carbon credits. Several Small Groups have signed the GHG Contract in the last two months

## WAKEUP, Inactive Small Groups – Sleeping Small Groups

TIST calls all the inactive Small Groups (Sleeping Small Groups) to think about at the Perumal Small Group of Marudham and discuss with them regarding their improvement with TIST. Ask the Perumal Small Group members how TIST helped them in carrying out the basic requirement of TIST.

It is absolutely no problem even if you have not attended the Node meeting even for more than one year. TIST is calling you all once again. Come and meet the TIST officials at the node meeting along with your land ownership certificate (certificate from the VOA) and sign the GHG contract immediately and become the privileged member of TIST like the Perumal Small Group of Marudham.

## சிறு குழு – ஜிஎச்ஜி கையெழுத்திடுதல்

ஜிஎச்ஜி ஒப்பந்தத்தின் முக்கியதுவத்தை "செழுமையின்" முன் இதழில் தெரிவித்திருந்தோம் சுருக்கமாக சொன்னால் – ஜிஎச்ஜியில் கையெழுத்திடுவதின் மூலம் சிறு குழு தங்களின் கார்பன் கிரிடிட்டுகளை விற்கும் உரிமையை டிஐஎஸ்டிக்கு அளிக்கிறது. இந்த உரிமையை மட்டுமின்றி டிஐஎஸ்டியின் சிறந்த பயிற்சிகளையும் கடைபிடிக்கின்றனர். சிறு குழுவினர் இவ்வுரிமைகளை டிஐஎஸ்டிக்கு கொடுக்க தவறினால் டிஐஎஸ்டியால் கார்பன் கிரிடுட்டுகளை விற்க இயலாது. இதனால் வவுச்சர் பேமென்டடுக்கான மூலதனத்தை டிஐஎஸ்டியால் கொடுக்க இயலாது. சென்ற இரு மாதங்களில் பல சிறு குழுக்கள் ஜிஎச்ஜி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்–டுள்ளனர்.

## மந்தமான செயல்பாடற்ற சிறுகுழுக்களே விழித்துக்கொள்ளுங்கள்

டிஐஎஸ்டி, செயல்பாடற்று கிடக்கும் எல்லா சிறு குழுவினர்க்கும் அழைப்பு விடுக்கிறது. இந்த செயலற்ற சிறு குழுக்களை பெருமாள் சிறு குழு பற்றி சிந்திக்க கூறி, டிஐஎஸ்டியுடன் சேர்ந்து தங்கள் முன்னேற்றம் பற்றி ஆலோசிக்க கூறுகிறது. பெருமாள் சிறு குழு அங்கத்தினருடன் உரையாடினால் டிஐஎஸ்டி அவர்களுக்கு எவ்வாறெல்லாம் உதவியது என்பதைப் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

ஒரு வருடத்திற்கு மேலாக நோடு கூட்டங்களில் பங்கெடுக்க வில்லையென்றாலும் எவ்வித பிரச்சினையும் இல்லை. டிஐஎஸ்டி உங்கள் எல்லோரையும் மீண்டும் அழைக்கிறது. குழுவினர் வந்து டிஐஎஸ்டியின் அதிகாரிகளை நோடு கூட்டங்களில் சந்தித்து, அவர்களுடைய நிலம் சொந்தம் என்பதை உறுதிபடுத்தும் சான்றிதழினை (விஏஓ விடமிருந்து பெற்று வந்த சான்றிதழ்) கொண்டு சென்று, உடனடியாக ஜிஎச்ஜி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு மருதத்தை சார்ந்த பெருமாள் சிறுகுழு போன்று டிஐஎஸ்டியின் அதிகாரபூர்வமான அங்கத்தினராகலாம்.



| तारीख Date | विवरण Particulars | चेक नं. Cheque No | निकाली गयी राशि Withdrawals रु. Rs. पै. P. | जमा की गयी राशि Deposits रु. Rs. पै. P. | जमाकर्ता के खाते में शेष राशि Balance रु. Rs. पै. P. | Initials |
|---|---|---|---|---|---|---|
| 13.7.05 | [illegible] | | | 1000- | 1000 | |
| 29/11/5 | [illegible] | | | 183732 | 184732 | |
| | To Self [illegible] | 582 | 27014 | | 157719 | |
| 30/11/5 | To [illegible] | 583 | 135000 | | 22719. | |



Bank Pass Book displaying Rs.1,83,733/- - Perumal Small Group
ரூபாய் 1,83,733/– காட்டும் வங்கி பாச் புக் – பெருமாள் சிறு குழு

## Avoid monoculture – Have multiple species with good spacing

TIST is not here to encourage one single kind of trees like casuarina or eucalyptus. TIST is encouraging the Small Groups to do reforestation/aforestation. A forest means lot of trees and different types of trees, not just single kind of trees. Now you may wonder that in a forest trees and plants are very tightly grown, but why TIST does not allow you to plant trees with less spacing. The reason for having good spacing between each tree is to allow the tree to grow too good height. For example, if a mango tree is planted with good spacing, the mango tree grows atleast 10 m in height with 4-5 m long side branches. This full-grown mango tree may sequester the carbon produced by one lorry per day. Suppose the spacing for the mango trees are very minimum, then the tree will grow not 10 m height and the side branches will not reach 4-5 m, automatically the carbon sequester by this tree will fall down. TIST is facilitating to have continuous funding for the Small Group Voucher payment through revenue from the carbon credits market. If the trees grown by you does not attain its normal height then how do we sequester the carbon and how do we market the carbon credits. Grow multiple species of trees and give enough spacing between each tree and enjoy the benefits from TIST.



Perumal Small Group / பெருமாள் சிறு குழு

## ஓர் இன பயிர் செய்யும் முறையை கைவிடுதல் – நன்றாக இடைவெளிவிட்டு பலவகை இன பயிர் செய்யும் முறையை கடைபிடித்தல்

டிஜஎஸ்டி சவுக்கு அல்லது நீலகிரி தைல மரங்கள் போன்ற ஓர் இன மரங்கள் நிறைந்த தோப்புகள் உருவாக்குதலை ஊக்குவிப்பதில்லை. டிஜஎஸ்டி சிறு குழுக்களை காடுகள் வளர்பதிலும் சீரமைப்பதிலும் ஆர்வம் செலுத்துதலையே ஊக்குவிக்கிறது. ஒரு காடு என்றால் நிறைய மரங்கள், வெவ்வேறு வகையான மரங்கள் கொண்டிருக்க வேண்டுமே தவிர ஒரே வகையான மரங்கள் கொண்டிருக்கக்கூடாது. காடுகள் என்றால் அடர்த்தியாக வளர்ந்த மரங்கள் நிறைந்த இடம் என்பதாகும் ஆனால் டிஜஎஸ்டியோ மரங்களுக்கு இடையே போதுமான இடைவெளியிருக்க வேண்டும் என்று கூறுகிறதே என்று நீங்கள் திகைக்கலாம். இடைவெளி வேண்டும் என்பதை வலியுறுத்த காரணம் மரங்கள் நன்றாக உயரமாக வளரவேண்டும் என்பதே ஆகும். உதாரணமாக மாமரங்களுக்கிடையே நன்றாக இடைவெளியிருந்தால் ஒவ்வொரு மாமரமும் 10மீ உயரம், 4–5 மீ பக்க கிளைகளுடன் காணப்படும் இவ்வாறாக முழுமையாக வளர்ச்சியடைந்த மாமரமானது ஒரு நாளைக்கு உதாரணமாக ஒரு லாரியின் மூலம் ஏற்படும் அசுத்தமான காற்றை சுத்தம் செய்ய தேவையான கார்பன் பெற உதவும். ஆனால் இடைவெளி மிக குறைவாக இருந்தால் மாமரங்கள் 10 மீ உயரம், 4–5 மீ பக்க கிளைகள் கொண்டிருக்காமல் முழுவளர்ச்சி–யடையாமல் இருக்கும். இதனால் கார்பன் கிரிட்டு உற்பத்தியும் குறையும். டிஜஎஸ்டி கார்பன் கிரிடுட்டுகள் மூலம் வவுச்சர் பேமென்ட் பெறும் முறையை வலியுறுத்தி கொண்டேயிருக்கிறது உங்களின் மரங்கள் போதுமான வளர்சியடையவில்லை என்றால் உங்களின் கார்பன் கிரிடிட்டுகளை எவ்வாறு விற்பனை செய்ய இயலும். டிஜஎஸ்டியின் முழுபலன் பெற பல இன வகை மரங்களை போதுமான இடைவெளியுடன் பயிர் செய்து பலன் அடையுங்கள்.

## Small Groups with Monoculture

The several Small Groups have more than 1000 trees, but they are all either casuarina or eucalyptus. Especially the Small Groups of Kattiampandal and Chittoor are still practicing monoculture.

All the Small Groups who have single kind of tree should immediately start planting some additional trees other than casuarina and eucalyptus. We have informed through our Chezumai to be ready with seedlings, so that immediately after the rainy season transplanting can be done. Now we had good rain. Immediately start transplanting your seedlings, if you do not have any seedlings, start a nursery with multiple species of seedlings in polythene bags immediately. Your quantifier will be visiting your groves during January-February 2006 for quantification. During the quantification, if you do not have any multiple species, the quantifier will not quantify your single kind trees.




Grove with multiple species – Bethel Nagar
பல இனவகை தோப்பு – பெத்தெல் நகர்

## ஓர் இனவகை மரங்களை பயிர் செய்யும் சிறுகுழுக்கள்

இவ்வகையான சிறு குழுக்கள் 1000 மரங்களுக்கு மேல் கொண்டுள்ளனர். ஆனால் அவை அனைத்தும் சவுக்கு அல்லது தைல மரங்கள் மட்டுமே ஆகும். கட்டியம்பந்தல் மற்றும் சித்தூர் சிறு குழுக்கள் இன்றும் ஓர் இனவகை வளர்ச்சியையே கடைப்பிடித்து வருகின்றனர்.

ஓர் இன வகை மரங்கள் கெண்ட சிறு குழுக்கள் உடனடியாக வேறுவகையான மரங்களையும் கூடதலாக பயிர் செய்ய தெடங்க வேண்டும். "செழுமை" மூலமாக நீங்கள் விதை நாற்றுகளுடன் தயாராக இருக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தோம். தாயராக இருந்தால் மழைகாலத்திற்கு பின் விதைநாற்றுகளை உடனடியாக இடம் பெயர்த்து பயிரிடலாம் இப்பொழுது நல்ல மழை இருந்தது. ஆகையால் உடனடியாக இடம் பெயர்த்து நாற்றுகளை பயிரிடலாம் விதை நாற்றுகள் இல்லையெனில், பல்வேறு இனவிதைகளை பாலிதீன் பைகளில் வைத்து நர்சரி தொடங்கலாம். உங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரிகள் (கணக்கீட்டாளர்) ஜனவரி – பிப்ரவரி 2006 ல் உங்களின் தோப்புகளை ஆய்வு செய்ய உங்களை சந்திப்பார்கள். அச்சமயம் உங்களிடம் பல இனவகை மரங்களோ அல்லது பல இனவகை நாற்றுகளோ இல்லையென்றால் உங்களின் ஓர் இன தோப்புகளை கணக்கிடமாட்டார்கள்.

## Seedlings Transplanted during 2005

The following Small Groups transplanted their seedlings during 2005.

1. Nelli Small Group of Vandhavasi
2. Vasudevan Small Group of Vandhavasi
3. Chamundhi Small Group of Chittoor
4. Saroja Small Group of Kandoor
5. Aseeamman Small Group of Kandoor
6. Nila Small Group of Sokandhi
7. Sakthi Small Group of Sokandhi

## 2005ல் இடம் பெயர்த்து பயிரிட்ட விதை நாற்றுகள்

கீழ்வரும் சிறு குழுக்கள் 2005 ல் தங்களின் நாற்றுகளை இடம் பெயர்த்துள்ளனர்

1. நெல்லி சிறு குழு – வந்தவாசி
2. வாசுதேவன் சிறு குழு – வந்தவாசி
3. சாமுண்டி சிறு குழு – சித்தூர்
4. சரோஜா சிறு குழு – கண்டூர்
5. ஆசிமண் சிறு குழு – கண்டூர்
6. நீலா சிறு குழு – சொக்கண்டி
7. சக்தி சிறு குழு – சொக்கண்டி.



Single kind of species
Casuarina trees of Vasudevan Small Group

ஒரு இன வளர்ச்சி
சவுக்கு மரங்கள் – வாசுதேவன் சிறு குழு




**Lokesh**
New Quantifier

**லோகேஸ்**
புதிய கணக்கீட்டாளர்



## Note from Melkodungalur Small Group

Since the day TIST started afforestation program in our village, 8 groups have been formed. We have also received, with thanks, an amount of Rs. 21,302 as voucher payment towards our voluntary approach and efforts by following the best practices of TIST.Several programs approached our village to enhance the status of the villages, but they all went away without reaching the villagers, but TIST is a breath of fresh air, because TIST activities are continuous for more than two years and TIST also planning to stay with us for more than 3 decades.

The groups that gain good amount of incentives are helping more groups to spring up. For example, the Balaji Small Group that gets an incentive of Rs.13,000, has assisted new groups like “Malligai”, “Murugan”, “Roja”, “Rose”, etc., by helping them open a bank account, by offering them assistance in raising / buying new saplings, etc. The successful groups have even contributed upto 10% of their incentive as financial assistance to the newer groups, thereby exhibiting a true spirit of social justice and forging a strong bond of unison among us in this act of afforestation. In the absence of such financial aid, it would have been arduous for the members of the newer groups to contribute the minimum required amount of Rs.250, towards the oening of a new bank account.

Sign the GHG agreement and take the Voucher payment.



ஜிஎச்ஜி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உடனடியாக வவுச்சர் தொகையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## மேல் கொடுங்கலூர் சிறு குழுவினரின் செய்தி

டிஐஎஸ்டி காடுகள் வளர்த்தல் நிகழ்வினை எங்கள் கிராமத்தில் தொடங்கிய நாள் முதல், 8 குழுக்கள்உருவாகியது. நன்றியுடன் நாங்கள் 21,302 ரூபாய் வவுச்சர் பேமென்ட்டை எங்களின் தன்னார்வ முயற்சிக்காகவும், சிறப்பு பயிற்சிகளை கடைப்பிடிப்பதற்காகவும் பெற்று கொண்டோம். பல நிகழ்வுகள் எங்களின் நல வாழ்வு நிலையை உயர்த்த எங்களை அனுகியது. ஆனால் அவையாவும் எங்களுக்கு பலன் அளிக்கவில்லை. ஆனால் டிஐஎஸ்டி நாங்கள் சுவாசிக்கும் தூய்மையான மூச்சு காற்று போன்றது. ஏனெனில் டிஐஎஸ்டியின் நிகழ்வுகள் எல்லாம் இரண்டு வருடமாக தொடர்ந்து எங்களை அனுகுவது மட்டுமின்றி டிஐஎஸ்டி குழுவினர் எங்களுடன் இன்னும் முப்பது வருடங்களுக்கும் மேல் தங்க திட்டமிட்டுள்ளனர்.

கனிசமான ஊக்க ஊதியம் பெறும் குழுக்கள் பல சிறு குழுக்கள் உருவாக உதவுகிறது. உதாரணமாக பாலாஜி சிறு குழு ரூ 13,000/- ஊக்க ஊதியமாக பெற்று, "மல்லிகை", "முருகன்", "ரோஜா", "ரோஸ்" போன்ற, புதிய குழுக்களுக்கு உதவியது. இப்புதிய குழுக்கள் வங்கியில் சேமிப்பு கணக்கு தொடங்க பாலாஜி குழு இவர்கஞக்கு முன் பணம் அளித்து உதவியது. இதோடு இல்லாமல் இவர்கள் புதிய நாற்றுகளை வளர்க்கவும் வாங்கவும் உதவியது. வெற்றியடைந்த குழுக்கள் தங்கள் ஊக்க ஊதியத்தில் 10 சதவிதத்தை புதிய குழுக்களுக்கு நிதி உதவியாக செய்கிறது. இதனால் காடு வளர்ப்பதில் குழுக்களிடையே ஒற்றுமையான புதிய பந்தம் ஏற்பட்டு சமூகநீதியும் வெளிப்படுகிறது. நிதி உதவி கிடைக்காத நிலையில், இந்த புதிய குழுக்கள் குறைந்த அளவு தொகையான ரூ 250/- செலுத்தி வங்கி கணக்கு தொடங்கவும் மிகவும் கடினமாக இருந்திருக்கும்.

In our humble opinion, such self-evolved systems would yield results in other villages too. We also request TIST to publish more such news of symbiotic relationship between the farmers and TIST in their “Chezumai” magazine.

R. Sridhar – Balaji Small Group
M.Krishnamoorthy, Rose Wood Small Group

### Note from TIST

It is very good to see that Small Groups have started to help one another by forming a trust and sharing 10% from their voucher payment. TIST advise is that, once the voucher is paid, the amount becomes yours (Small Groups). You should not include TIST or any of its workforce as guarantor or support to hold or to have control over your trust amount. Those jobs should be taken care by yourselves, because it is purely your own money and your own personal job. Small Groups should have this point in mind.



எங்களுடைய தாழ்மையான கருத்து என்னவென்றால். இது போன்ற சுய விஸ்தரிப்பு முறை மற்ற கிராமங்களிலும் நல்ல பலனை அளிக்கும். இது போன்று விவசாயிகளுக்கிடையே வழக்கமாயிருக்கும் உதவும் உறவுகள் பற்றி மேலும் விவரங்களை "செழுமை" இதழில் வெளியிட டிஐஎஸ்டியை தாழ்மையுடன் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

ஆர்.ஸ்ரீதல் – பாலாஜி சிறு குழு
எம்.கிஷ்ணமூர்த்தி – ரோஸ்வுட் சிறு குழு

### டிஐஎஸ்டியிடமிருந்து செய்தி

சிறு குழுக்கள் ஒருவருக்கொருவர் உதவுவது சிறப்பானதாகும். இவர்கள் "ட்ரஸ்ட் " ஒன்று உருவாக்கி தங்களின் ஊக்க ஊதியத்தில் 10 சதவிதத்தை பகிர்ந்து கொண்டு உதவிக்கொள்கிறார்கள் டிஐஎஸ்டியின் அறிவுரை என்னவென்றால் வவுச்சர் செலுத்தப்பட்டு விட்டாலே இந்த தொகை சிறு குழுக்களின் சொந்தமாகிறது. உங்களின் 10 சதவிதம் சேமித்து வைத்து உங்களுக்குள் பயன்படுத்திக்கொள்ளும் இத்திட்டத்தில் டிஐஎஸ்டியையோ அல்லது டிஐஎஸ்யின் செயல்பாட்டு குழுக்களையோ உத்திரவாளராகவோ ஆதரவாளராகவோ அல்லது தொகையின் முழு பொருப்பாளராகவோ சேர்த்துக்கொள்ள–க்கூடாது. இந்த வேலைகளை எல்லாம் நீங்களே செய்து கொள்ளவேண்டும். ஏனெனில் இது உங்களின் சொந்தவேலை. இக்கட்டுப்பாடுகளை ஒவ்வொரு சிறு குழுக்களும் கடுமையாக கடைபிடிக்க வேண்டும்.

R. Sridhar – Balaji Small Group

ஆர்.ஸ்ரீதல் – பாலாஜி சிறு குழு

## Upcoming New Small Groups of TIST

### Vellaputur Village

Vellaputur is a small village, which is one kilometer from Kattiampandal. TIST made several efforts to register Small Groups from this village, but they were all very slow in picking up. Now four Small Groups from Kattiampandal have received huge amount from TIST as voucher payment. This voucher payment to the Small Groups of Kattiampandal has attracted the people of Vellaputur and many have come forward to join TIST voluntarily to follow the 'Best Practices' of TIST. More details about Vellaputur will feature in the next Chezhumai.

### Poondithangal Village

Poondithangal is a village in Chengelpetu District. From this village, there are few people who are prepared to join TIST voluntarily.

Mrs.Chempakalakshmi, Ex-Chairman of Tamilnadu State Social Welfare Board belongs to Poondithangal village. She is impressed with the activities of TIST and planning to join TIST by forming Small Group. More details about Poondithangal will feature in the next Chezhumai.

## வளர்ந்து வரும் டிஐஎஸ்டியின் சிறு குழுக்கள்

### வேலப்புதூர் கிராமம்

வேலப்புதூர், கட்டியம்பந்தலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஒரு சிறிய கிராமம். இங்கிருந்து பல சிறு குழுக்களை பதிவு செய்ய டிஐஎஸ்டி பல முயற்சிகள் எடுத்தது. ஆனால் இவர்கள் எல்லோரும் முன்னேற்றப்பாதையில் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே இருந்தார்கள். தற்பொழுது கட்டியம்பந்தலை சேர்ந்த நான்கு சிறு குழுக்கள் வவுச்சர் பேமெண்டாக பெரிய தொகையை பெற்று கொண்டுள்ளனர். இந்த வவுச்சர் பேமெண்ட் வேலப்புதூரின் மக்களை மிகவும் கவர்ந்து அவர்களை டிஐஎஸ்டியில் தானாக வந்து சேரவைத்துள்ளது. அவர்கள் டிஐஎஸ்டியின் சிறப்புப்பயிற்சிகளை பின்பற்ற முன்வந்துள்ளனர். அடுத்த செழுமை இதழில் வேலப்புதூர் பற்றி மேலும் பல விவரங்கள் வெளியாகும்.

### பூண்டித்தாங்கள் கிராமம்

பூண்டித்தாங்கள் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமம். இக்கிராமத்திலிருந்து சில மக்கள் டிஐஎஸ்டியில் சேர முன்வந்துள்ளனர்.

திருமதி. செம்பக லக்ஷமி (முன்னால் அவைத்தலைவர் தமிழ்நாடு மாநில சமுகநல சங்கம்) இக்கிராமத்தை சார்ந்தவர் டிஐஎஸ்டியின் செயல்பாடுகள் இவர்களை மிகவும் கவர்ந்துள்ளது. சிறு குழுக்கள் உருவாக்கி டிஐஎஸ்டியில் சேர திட்டமிட்டுள்ளனர். இக்கிராமத்தை பற்றிய மேலும் சில செய்திகள் செழுமையின் அடுத்த இதழில் வெளியாகும்.

## நோட் கூட்ட அட்டவணை

| நோடு | உட்பட்ட கிராமங்கள் | நோட் மையம் | கிழமை | காலம் | நேரம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | முதல் | வரை |
| வாசி மற்றும் மேல் கொடுங்கலூர் | சிங்கப்பள்ளி உளுந்தை மேல் கொடுங்கலூர் காட்டுக்கொல்லி | வன்தவாசி, மேல் கொடுங்கலூர் குன்னவாக்கம் | முதல் செவ்வாய்<br>03.01.2006<br>03.07.2006 | மாலை<br>மாலை | 3.00<br>5.30 | 5.00<br>7.30 |
| பெருவளையம் | பெருவளையம் மேலாப்புலம், மோட்டூர் | மேலாப்புலம் | இரண்டாவது சனி<br>14.01.2006<br>11.02.2006 | காலை | 9.00 | 11.00 |
| கட்டியாம்பந்தல் | கட்டியாம்பந்தல் வெள்ளப்புத்தூர் | கட்டியாம்பந்தல் | இரண்டாவது ஞாயிறு<br>08.01.2006<br>12.02.2006 | காலை | 9.00 | 12.00 |
| சித்தூர் | சீராநல்லூர், சித்தூர், நந்திமேடு, மொளச்சூர்,. ஆட்டுப்புத்தூர் சிங்காடிவாக்கம் மருதம், ஜம்போதை | மொளச்சூர் மருதம், ஜம்போதை | மூன்றாவது ஞாயிறு<br>15.01.2006<br>19.02.2006 | காலை | 8.30 | 10.30 |
| காந்தூர் | சோகண்டி காந்தூர் | மொளச்சூர் | மூன்றாவது ஞாயிறு<br>15.01.2006<br>19.02.2006 | மாலை | 6.00 | 8.00 |
| ஆண்டிச்சிறு வல்லூர் | வேடல், சிறுவல்லூர் ஆண்டிச்செருவல்லூர் கொட்டவாக்கம் மேல்ப்படவூர், சிறுவல்லூர், மேட்முக்காலனி | வேடல் | நான்காவது சனி<br>28.01.2006<br>25.02.2006 | மாலை | 3.00 | 5.00 |